## இராசிபுரம் நகராட்சி

## நகர்மன்ற சாதாரணக் கூட்ட அறிவிப்பு

2025–ஆம் வருடம் ஆகஸ்டு மாதம் 26–ஆம் தேதி செவ்வாய் கிழமை நண்பகல் 10.45 மணியளவில் இராசிபுரம் நகராட்சியின் சாதாரணக் கூட்டம் ஒன்று நகர் மன்ற கூட்ட அரங்கில் நடைபெறவுள்ளது.

அது சமயம் கீழ்க்கண்டப் பொருள்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

| | |
|---|---|
| இராசிபுரம் நகராட்சி } | தலைவர், |
| நாள் 19.08.2025 | நகர் மன்றம் |

### பொருள்கள்

( 1 ) தமிழ்நாடு சட்டமன்ற வரவு செலவு 2025-26-ற்கான நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கான (மானிய கோரிக்கை எண். 34) "நான்காண்டு சாதனை மலர்" புத்தகம் நகராட்சி நிருவாக இயக்குநரகம் மூலம் அனைத்து மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் மேற்கொள்ளப்பட்ட திட்டப்பணிகள் மற்றும் சிறப்பான செயல்பாடுகள் குறித்து தயாரித்து வெளியிடப்பட்டது. மேற்காணும் சாதனை மலர் புத்தகம் அச்சிடப்பட்டு தயார் செய்யப்பட்டதற்கான செலவினப் பட்டியல் தொகை ரூ.19,80,000/– (18 சதவீத GST உட்பட ) சம்மந்தப்பட்ட நிறுவனத்திற்கு செலுத்தும் பொருட்டு மாநகராட்சி மற்றும் நகராட்சிகளுக்கு தரநிலை வாரியாக செலுத்த ஆணையிடப்பட்டதற்கிணங்க இராசிபுரம் நகராட்சிக்கான பங்கு தொகை ரூ. 7500/– என்பதால் அரசாணை எண் (நிலை) 249, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 07.10.2023-இன்கீழ் நகராட்சி நிருவாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு வழங்கியதற்கு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. ளி

**அலுவலகக்குறிப்பு :**

அ) மன்றம் பதிவு செய்யலாம்.
ஆ) மேற்படி தொகை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்டதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

(1494/25/இ1)

### தீர்மானம் எண். 735

அனுமதிக்கப்பட்டது.

( 2 ) இராசிபுரம் நகராட்சியில் CGF and O & M (2025-2026) திட்டத்தின்கீழ் மழைநீர் வடிகால் அமைக்க ரூ. 37.00 இலட்ச மதிப்பீட்டிற்கு நகராட்சி நிருவாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணையில் ந.க.எண். 9999/2025/SS2, நாள் 30.05.2025–இல் கீழ்க்கண்டவாறு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | நீளம் (மீ.) | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | அரசு மான்யம் (ரூ. இலட்சத்தில்) | நகராட்சியின் பங்குத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| 1 | Construction of Storm water drain at V.Nagar Road No. 1 Cross -3 (053007R177), V.Nagar Road No. 7 Cross 3 (053008R468), V.Nagar Road No. 1 Cross -1 (053007R175), V.Nagar Road No. 1 Cross -2 (053007R176), V.Nagar Road No. 19 (053008R208), V.Nagar Road No. 5 Cross -1 (N-S) (053010R221), V.Nagar Road No. 6 Cross -1 (053010R222), Gandhi Nagar Road No. 1 Cross - 5 (053026R426) in Rasipuram Municipality. | 789.40 | 37.00 | 30.00 | 7.00 |

**அலுவலகக்குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) நகராட்சி பங்குத் தொகை ரூ. 7.00 இலட்சம் நகராட்சி வருவாய் நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

இ) மேற்கண்ட திட்டப் பணி ஆனதால் நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

(1266/25/இ1)

**தீர்மானம் எண். 736**

அனுமதிக்கப்பட்டது.

**(3)** மாவட்ட ஆட்சித் தலைவர், நாமக்கல் அவர்களின் கடித ந.க.எண். வ2/8752/2024, நாள் 17.04.2025—இல் இராசிபுரம் நகராட்சியில் புதியதாக அங்கன்வாடி மையம் இந்நகராட்சி கல்வி நிதியில் அமைத்து தரக்கோரப்பட்டதற்கிணங்க கீழ்கண்டப் பணிகளுக்கு 28.05.2025 அன்று நடைபெற்ற நகர் மன்ற கூட்ட தீர்மான எண். 728—இன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

| வ.எண் | அங்கன்வாடி மையம் | அங்கன்வாடி மைய எண் | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | கோனேரிப்பட்டி | 33609150234 | அண்ணாசாலை நகராட்சி ஆரம்ப பள்ளி அங்கன்வாடி மைய பழைய கட்டிடம் இடிக்கப்பட்டு புதிய கட்டிடம் கட்டுதல் | 18.00 |
| 2 | பாரதிதாசன் சாலை | 33609150226 | பாரதிதாசன் சாலை நகராட்சி நடுநிலைப் பள்ளியில் அங்கன்வாடி மையம் கட்டுதல் | 18.00 |

ஆனால் தற்போது வரிசை எண்.1 கோனேரிப்பட்டி அங்கன்வாடி மையத்திற்கு புதிய கட்டிடம் கட்ட இராசிபுரம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் (2025-26) ( திட்ட இயக்குநர், நாமக்கல் மாவட்டம் ந.க.எண். 843/2025/அ4, நாள் 23.05.2025) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே இப்பணிக்கு பதிலாக கீழ்கண்டப் பணி செய்ய மாவட்ட ஆட்சி தலைவர் நாமக்கல், அவர்களின் கடித ந.க.எண். வ2/8752/2024, நாள் 04.06.2025–இல் தெரிவித்துள்ளார்கள்.

| **வ.எண்** | **அங்கன்வாடி மையம்** | **அங்கன்வாடி மைய எண்** | **பணியின் விவரம்** | **மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில்** |
|---|---|---|---|---|
| 1 | காட்டூர் | 33609150233 | நகராட்சி நடுநிலைப்பள்ளி காட்டூர், பள்ளி வளாகத்தில் உள்ள அங்கன்வாடி மைய பழைய கட்டிடம் இடிக்கப்பட்டு புதிய கட்டிடம் கட்டுதல் | 18.00 |

எனவே தற்போது மேற்கண்ட பாரதிதாசன் சாலை மற்றும் காட்டூர் பகுதியில் அங்கன்வாடி மையம் கட்டுவதற்கு திருத்திய நிர்வாக அனுமதி கோரலாம்.

<u>அலுவலகக்குறிப்பு :</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) மேற்படி பணி கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
இ) நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

(1049/25/இ2)

**தீர்மானம் எண். 737**

அனுமதிக்கப்பட்டது.

(4) நகராட்சி நிருவாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையில் கழிவுநீர் ஊர்தி வாகனம் கொள்முதல் செய்யப்பட்டதற்கு மூன்றாம் நபர் பரிசோதனை அறிக்கை அரசு பொறியியல் கல்லூரியில் பெற வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் பேரில் அரசு பொறியியல் கல்லூரி, கருப்பூர், சேலம் அவர்களிடம் மூன்றாம் நபர் பரிசோதனை செய்து தரக்கோரி கடிதம் அனுப்பப்பட்டதில் பரிசோதனைக் கட்டணம் ரூ. 12000/– + 2160/- (18% GST) = ரூ. 14160/– செலுத்துமாறு தெரிவிக்கப்பட்டதற்கிணங்க மேற்கண்டத் தொகை செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு :</u>

அ) மன்றம் அங்கீகரிக்கலாம்.

ஆ) நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பரிசோதனைக் கட்டணம் செலுத்தியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(3056/24/இ2)

**தீர்மானம் எண். 738**

அனுமதிக்கப்பட்டது.

(5) இராசிபுரம் நகராட்சியில் கசடுகழிவு மேலாண்மையை செயல்படுத்த தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் (திருத்த) சட்டம் 2022 X-A அத்தியாயம் பிரிவு 199, அத்தியாயம் XI உள்ளாட்சி அமைப்பு விதிகள் 2023 அத்தியாயம் XI பகுதி IV, 2019–ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள் சுகாதாரமற்ற கழிப்பறைகள் தடை மற்றும் அது சார்ந்த பணியாளர்களின் மறு வாழ்வுக்கான சட்டம் 2013 ஆகியவற்றின்படி இத்துடன் இணைக்கப்பட்ட துணை விதிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு :</u>**

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2)அரசிதழ் வெளியீடு மற்றும் செய்தித்தாள்கள் விளம்பர செலவுகளை மன்றம் அனுமதிக்கலாம்.

(1529/25/எச்1)

**தீர்மானம் எண். 739**

அனுமதிக்கப்பட்டது.

(6) இந்நகராட்சியில் கொசு மூலம் பரவும் நோய்களை தடுக்கும் பொருட்டு கொசுப்புழு தடுப்பு பணியில் ஈடுபடும் சுய உதவிக் குழுவின் 50 பணியாளர்களை ஜூலை 2025 முதல் மேலும் ஓராண்டிற்கு பயன்படுத்திக் கொள்ளவும் இதற்கான உத்தேச செலவினம் ரூ. 40.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு :</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

(1550/18/எச்1)

**தீர்மானம் எண். 740**

அனுமதிக்கப்பட்டது.

(7) இராசிபுரம் நகராட்சியில் நகராட்சி நிருவாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை கடிதத்தில் (ந.க.எண். 16492/2023/EA2, நாள் 24.02.2025) 15–ஆவது மத்திய நிதிக்குழு மான்யம் (Tied and untied Grant) Tied Grant 2023–24–இன்கீழ் கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டது. மேலும், இப்பணிகளுக்கு 08.04.2025–ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு மதிப்பீட்டைவிட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களுக்கு பணியாணை வழங்கப்பட்டது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | மதிப்பீட்டைவிட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்தவரின் விவரம் |
|---|---|---|---|

| 15– ஆவது மத்திய நிதிக்குழு மான்யம் 2023–2024 | | | |
|---|---|---|---|
| 1 | இராசிபுரம் நகராட்சியில் வள மீட்பு மையம் புதுப்பித்தல் (RRC) பணி | 650000/– | திரு பிரகாசம், ஒப்பந்ததாரர் – 0.08 % மதிப்பீட்டைவிட குறைவு.<br>திரு பெரியசாமி, ஒப்பந்ததாரர் – 1.20 % மதிப்பீட்டைவிட அதிகம். |
| 2 | இராசிபுரம் நகராட்சியில் நுண் உர மையத்தில் (MCC) ஒயரிங் பணி செய்தல் | 250000/– | P.B. எண்டர்பிரைசர்ஸ் – 0.12 % மதிப்பீட்டைவிட குறைவு.<br>J.P.கன்ஸ்ட்ரக்ஷன் ஒப்பந்ததாரர் – 0.98 % மதிப்பீட்டைவிட அதிகம். |
| 3 | இராசிபுரம் நகராட்சியில் உள்ள 21 பொதுக் கழிப்பறைகளில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளுதல். | 500000/– | திரு பிரகாசம், ஒப்பந்ததாரர் – 0.10 % மதிப்பீட்டைவிட குறைவு.<br>திரு பெரியசாமி, ஒப்பந்ததாரர் – 0.89 % மதிப்பீட்டைவிட அதிகம். |

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் பதிவு செய்யலாம்.

**(0803/25/இ1)**

**தீர்மானம் எண். 741**

பதிவு செய்யப்பட்டது.

**(8)** இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான ஈப்பு வாகனம் TN 28 CZ 6222–ற்கு ஐந்தாவது சர்வீஸ் மற்றும் வாகன பழுது நீக்கும் பணி மேற்கொள்ள ரூ. 21,218/– ஆகிறது. பணியின் அவசியம் கருதி நகர் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று மேற்கண்டப் பணியை அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தில் செய்தமைக்கும், அதற்குரிய செலவினத்தை குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(3310/25/இ2)**

**தீர்மானம் எண். 742**

அனுமதிக்கப்பட்டது.

**(9)** இராசிபுரம் நகராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தில் 10 முகாம்கள் நடத்தி பொதுமக்களிடம் குறைகள் கேட்டு நிவர்த்தி செய்ய மாவட்ட ஆட்சியர், நாமக்கல் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 16003/2025/G4, நாள் 01.07.2025–இல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சியில் 15.07.2025 முதல் 15.09.2025 வரை முகாம் நடைபெற உள்ளது. இம்முகாமிற்கு தேவையான அடிப்படை வசதிகளை செய்து தருதல் மற்றும் இதர பணி மேற்கொள்ள மேற்கண்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இதற்கான உத்தேச செலவினம் ரூ. 9,50,000/– ஆகும். எனவே இப்பணியின் அவசர அவசியம் கருதி உள்ளூர்

விலைப்புள்ளி பெற்று இப்பணியை செய்வதற்கும் செலவினத்திற்கும் நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக்குறிப்பு :</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) இச்செலவினம் பொது நிதி **2025–26–**இல் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(5000/23/இ1)**

**தீர்மானம் எண். 743**

அனுமதிக்கப்பட்டது.

**( 10 )** இராசிபுரம் நகராட்சியில் (AMRUT 2.0) புதிய கூட்டுக் குடிநீர் திட்டத்தின்கீழ் ரூ. **100.20** கோடி மதிப்பீட்டில் குடிநீர் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு **90** சதவீத பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மேலும் திட்ட மதிப்பீட்டில் ஜல் ஜீவன் திட்டத்தின்கீழ் **4996** எண்ணிக்கை வீடுகளுக்கு குடிநீர் இணைப்புகள் வழங்கிய பின்னரே மீதமுள்ள **40** சதவீத தொகையினை பெற இயலுமென செயற் பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், இராசிபுரம் அவர்களின் கடித Lr.No. 4425 F Rasipuram CWSS Pkg-3/JDO/Sew Dn/RPM/2025 நாள் **07.04.2025** தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, தற்போது **4996** எண்ணிக்கை வீடுகளுக்கு புதிய குடிநீர் இணைப்பு வழங்க ரூ. **270.00** இலட்சம் மதிப்பீட்டில் திட்ட பிரேரணை தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே, இம்மதிப்பீட்டிற்கு அரசின முழு மான்ய நிதியாக பெற்று பணி செய்ய நகராட்சி நிருவாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு முன்மொழிவு அனுப்புவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக்குறிப்பு :</u>

அ) நகராட்சி நிருவாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு முன்மொழிவு அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) மேலும், அரசின் முழு மான்யமாக பெற்று பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(1742/18/இ2)**

**தீர்மானம் எண். 744**

அனுமதிக்கப்பட்டது.

**( 11 )** இராசிபுரம் நகராட்சியில் புதியதாக அறிவு சார் மையம் மற்றும் நூலகம் கட்டும் பணிக்கு நகராட்சி நிருவாக இயக்குநர், சென்னை அவர்களிடமிருந்து கருத்துரு அனுப்ப தெரிவித்தற்கிணங்க TUFIDCO நிறுவனத்திற்கு கருத்துரு அனுப்பி ரூ. 203.00 இலட்சத்திற்கு நிதி ஒதிக்கீடு பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிகள் மேற்கொள்ளும் இடத்திற்கு மண் பரிசோதனை சான்று பெற்று அனுப்ப தெரிவ்க்கப்பட்டுள்ளது. இதற்கு ரூ. 9000/- உத்தேச செலவினம் ஆகும். மேற்கண்டப் பணியின் அவசியம் கருதி நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று மேற்கண்ட பணி செய்தமைக்கும் அதற்குரிய செலவினத்தை பொது நிதியில் மேற்கொண்டமைக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு :</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(2219/24/இ1)

**தீர்மானம் எண். 745**

அனுமதிக்கப்பட்டது.

(12) மாவட்ட ஆட்சித் தலைவர், நாமக்கல் அவர்களின் கடித ந.க.எண். வ2/8752/2024, நாள் 17.04.2025 மற்றும் நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி நாள் 09.06.2025– இன்படி இராசிபுரம் நகராட்சியில் புதியதாக அங்கன்வாடி மையம் இந்நகராட்சி கல்வி நிதியில் அமைக்க நிர்வாக அனுமதி பெறப்பட்டு 27.06.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

| வ. எண் | அங்கன்வாடி மையம் | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்தவரின் விவம் |
|---|---|---|---|---|
| 1 | பாரதிதாசன் சாலை 33609150226 | பாரதிதாசன் சாலை நகராட்சி நடுநிலைப் பள்ளியில் அங்கன்வாடி மையம் கட்டுதல் | 18.00 | M/s. ஹர்சிதா கன்ஸ்ட்ரக்ஷன் - 0.04% மதிப்பீட்டை விட குறைவு<br>M/S எம்.பி கான்ட்ராக்டர் -1.78% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | காட்டூர் 33609150233 | நகராட்சி நடுநிலைப்பள்ளி காட்டூர், பள்ளி வளாகத்தில் உள்ள அங்கன்வாடி மைய பழைய கட்டிடத்தினை இடித்துவிட்டு புதிய கட்டிடம் கட்டுதல் | 18.00 | M/s.ஹர்சிதா கன்ஸ்ட்ரக்ஷன் - 1.23% மதிப்பீட்டை விட அதிகம்<br>M/S எம்.பி கான்ட்ராக்டர் -0.03% மதிப்பீட்டை விட குறைவு |

மேற்காணும் வ.எண்1 பாரதிதாசன் சாலை நகராட்சி நடுநிலைப் பள்ளியில் அங்கன்வாடி மையம் கட்டுதல் பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த M/s.ஹர்சிதா கன்ஸ்ட்ரக்ஷன் மற்றும் வ.எண்.2 நகராட்சி நடுநிலைப்பள்ளி காட்டூர், பள்ளி வளாகத்தில் உள்ள அங்கன்வாடி மைய பழைய கட்டிடத்தினை இடித்துவிட்டு புதிய கட்டிடம் கட்டும் பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த M/S. எம்.பி கான்ட்ராக்டர் அவர்களுக்கு பணியின் அவசியம் கருதி பணியாணை வழங்க நகர் மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) மேற்படி பணி கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
இ) அவசர அவசியம் கருதி நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணியாணை வழங்கியதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

(1049/25/இ1)

**தீர்மானம் எண். 746**

அனுமதிக்கப்பட்டது.

( 13 ) இராசிபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட மனைப்பிரிவு அங்கீகாரம் கோனேரிப்பட்டி வார்டு – B, பிளாக்– 11, நகர புல எண். 71/5 மற்றும் சந்திரசேகரபுரம் கிராமம் சர்வே எண்.361/4B-இல் 2.00 ஏக்கர் பரப்புள்ள இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க மனுதாரர் 1. திரு என்.சந்திரசேகரன், த/பெ. நாராயண செட்டியார் (9443258158) 2. திரு கே.எஸ். பிரகாஷ், த/பெ. கே.ஜீ. சங்கர்லால், 3. திருமதி கே.பி. ஜனனி, க/பெ. கே.எஸ். பிரகாஷ், க.எண். 75–1/4B, பெரமனூர் கிழக்கு தெரு, 4 ரோடு அருகில், சேலம் – 636 007 என்பவருக்கு 2.00 ஏக்கர் பரப்புள்ள இடத்தில் 32 குடியிருப்பு மனைகள் உள்ளடக்கிய குடியிருப்பு மனைப்பிரிவிற்கு உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல் அவர்களின் மனைப்பிரிவு வரைபட எண். SWP /DTCP /NAMAKKAL /LAYOUT NO. 216/2024–இல் ROC NO.NKL/ CYS3NG2O/ 29416/ 2024/ TCP, நாள்16.08.2024-இல் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி மனைப்பிரிவிற்கு, பொறியியல் பிரிவின் 04.07.2025 மற்றும் 07.08.2025–ஆம் தேதிய குறிப்பில் மனைப்பிரிவிற்கு அடிப்படை வசதிகளான அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திலுள்ளவாறு தார்சாலைகள் அமைக்கப்பட்டுள்ளது. சாலையின் இருபுறமும் சிமெண்ட் கான்கீரிட் மழைநீர் வடிகால் அமைக்கப்பட்டு சாலையின் குறுக்கில் சிமெண்ட் பைப் அமைத்து பிரதான சாலையில் உள்ள வடிகாலில் இணைக்கப்பட்டுள்ளது. சாலையின் 90 மி.மீ. PVC குடிநீர் பகிர்மான குழாய்கள் அமைக்கப்பட்டு பிரதான குழாயில் இணைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. சாலையின் 21 எண்ணிக்கை சோலார் மின் விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் மின்கம்பங்கள் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் பொறியியல் பிரிவு குறிப்பின்படி மூன்றாம் தரப்பில் பணிகளை ஆய்வு செய்து சான்று வழங்க கோரியதின் அடிப்படையில் முதல்வர், ஞானமணி பொறியியல் கல்லூரி, பாச்சல், நாமக்கல் மாவட்டம் அவர்களை இவ்வலுவலகத்திலிருந்து கோரப்பட்டதின் அடிப்படையில், மேற்கண்ட கல்லூரியின் நேராய்வின்படி, மேற்கண்ட மனைப்பிரிவில் அடிப்படை வசதிகள் தார் சாலை, சாலையின் இருபுறமும் மழைநீர் வடிகால் வசதி, சாலையில் சோலார் விளக்குகள் வசதி, சாலையின் இருபுறமும் 90 mm. pvc குடிநீர் பகிர்மான குழாய் ஆகிய அடிப்படை வசதிகள் அமைக்கப்பட்டுள்ளதாக, சரிபார்த்து தங்களது Letter No. 42/2025/GCT, Dated 14.08.2025 கடிதத்தில் தெரிவித்துள்ளார்கள்.

மனைப்பிரிவு ஒப்புதல் அளிக்க உரிய கட்டணம் நகரமைப்பு மற்றும் பொறியியல் பிரிவின் குறிப்பின்படி மொத்தம் ரூ. 2,72,012/–ஐ மனுதாரர் இந்நகராட்சியில் இதர கட்டணமாக ரூ. 2000/–ஐ சலான் எண். 053/01/3/25–26/0001305 மற்றும் ரூ. 70,012/–ஐ சலான் எண். 053/01/3/25–26/0001303–லும் மற்றும் முன் வைப்புத் தொகையாக ரூ. 2,00,000/–ம் சலான் எண். 053/01/3/25–26/0001304, நாள் 18.08.2025–லும் செலுத்தி ரசீது சமர்ப்பித்துள்ளார். மேற்படி மனைப்பிரிவில் பொது ஒதுக்கீடு மற்றும் மனைப்பிரிவு சாலை ஆகியவற்றினை தானப்பத்திர ஆவண எண். 3579/2023, நாள் 26.05.2023–இன்படி சாலைகளின் பரப்பளவு 2416.02 சதுர மீட்டர் இடமும், பூங்காவிற்காக 560.53 சதுர மீட்டர் இடமும் மற்றும் பொது உபயோகத்திற்காக 29.25 சதுர மீட்டர் இடமும் ஆணையாளர், இராசிபுரம் நகராட்சி பெயரில் தானமாக பதிவு செய்து, நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் அவர்கள் மூலம் நகராட்சியில் சமர்ப்பித்துள்ளதை பின்னேற்பு ஒப்புதல் பெறுவதற்கும், மேற்கண்ட மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் பெறுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

அரசாணை (நிலை) எண். 181 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள் 09.12.2020 மற்றும் நகராட்சி நிருவாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண். 12843/22/டிபி2 நாள் 20.10.2022 சுற்றறிக்கையின்படியும், மேற்க்கண்ட தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள மனைப்பிரிவிலுள்ள சாலை, பூங்கா மற்றும் பொது ஒதுக்கீடு இடங்களை தானப்பத்திரத்தின்படி தானமாக ஒப்படைக்கப்பட்ட சொத்துக்களை விதிமுறைகளுக்குட்பட்டு இந்நகராட்சி பராமரிப்பிற்கு ஏற்க, தானமாக பத்திரப்பதிவு செய்ததை இம்மன்றம் பின்னேற்பு ஒப்புதல் வழங்கலாம் மற்றும் மேற்கண்ட மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கலாம்.

(2448/24/எப்1)

**தீர்மானம் எண். 747**

ஒப்புதல் வழங்கப்பட்டது.

(14) இராசிபுரம் நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் (2025 – 2026) கீழ் வார்டு எண். 01 குமாரசாமி தெருவில் அங்கன்வாடி மையம் அமைத்தல் பணிக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாமக்கல் அவர்களின் ந.க.எண். 843/2025/அ4, நாள் 20.06.2025-இன்படி நிர்வாக அனுமதி வழங்கியுள்ளதன் பேரில் ரூ. 16,00,000/- என்ற மதிப்பீட்டிற்கு 24.07.2025-இல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1 | M/S. Hari Construction | -0.06% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | M/S. Harsidha Construction | 1.85% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்படி பணிக்கு மதிப்பீட்டை விடக் குறைவான -0.06% ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/S. Hari Construction அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியானை வழங்கியதற்கும் பணி மேற்கொள்வதற்கும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>**அலுவலகக்குறிப்பு :**</u>

மன்றம் பதிவு செய்யலாம்.

(1444/25/இ1)

**தீர்மானம் எண். 748**

பதிவு செய்யப்பட்டது.

( 15 ) இராசிபுரம் நகராட்சியில் நகராட்சி நிருவாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை கடிதத்தில் (ந.க.எண். 2459/2024/மா.தி1, நாள் 20.01.2025) விடுபட்ட சாலைகளை அமைப்பதற்கு TURIP 2024-25–ஆம் நிதியாண்டில் கீழ்க்கண்ட சாலைப் பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டது. நகராட்சி நிருவாக மண்டல செயற் பொறியாளர், சேலம் (கூ.பொ.) அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 391/2024/பி1–3, நாள் 20.01.2025 அன்று தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு 17.02.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணியாணை 10.03.2025–ஆம் தேதியன்று திரு பிரகாசம் அவர்களுக்கு வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | சிப்பம் 1 – இராசிபுரம் நகராட்சி வி. நகர் ரோடு எண். 11, திருவேங்கடவிலாஸ் ஆகிய தெருக்களில் தார்சாலை அமைத்தல் | 78.00 |
| 2 | சிப்பம் 2 – இராசிபுரம் நகராட்சி சின்ன கடைவீதி, தேரடி தெரு, திருவள்ளுவர் தெரு ஆகிய தெருக்களில் தார்சாலை அமைத்தல் | 25.00 |
| 3 | சிப்பம் 3 – இராசிபுரம் நகராட்சி காந்தி ரோடில் தார்சாலை அமைத்தல் | 102.00 |

<u>அலுவலகக்குறிப்பு :</u>

மன்றம் பதிவு செய்யலாம்.

(1890/24/இ1)

**தீர்மானம் எண். 749**

பதிவு செய்யப்பட்டது.

**( 16 )** இராசிபுரம் நகராட்சியில் நகராட்சி நிருவாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை கடிதத்தில் (ந.க.எண். 9730/2025/SS1, நாள் 02.04.2025) விடுப்பட்ட சாலைகளை அமைப்பதற்கு TURIP 2025-26 ஆம் நிதியாண்டில் கீழ்கண்ட சாலைப் பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டது. நகராட்சி 28.04.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணியாணை வழங்கப்பட்டுள்ளதற்கு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) | மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்தவரின் விவரம் |
|---|---|---|---|
| 1 | <u>சிப்பம்1:</u>இராசிபுரம் நகராட்சி ஸ்கேவஞ்சர் காலனி மெயின், ஸ்கேவஞ்சர் காலனி கிராஸ் 1, 2, 3 மற்றும் 4, வடக்கு காலனி மெயின்கிராஸ்–4, வி. நகர் ரோடு எண்.7 கிராஸ்–2 மற்றும் 3 ஆகிய தெருக்களில் தார்சாலை அமைத்தல் மற்றும் வி.நகர் ரோடு எண். 1 கிராஸ் லைன் 1 to 2, 2 to 3 மற்றும் 3 to 4 ஆகிய தெருக்களில் சிமெண்ட் சாலை அமைத்தல். | 33.00 | திரு பிரகாசம் ஒப்பந்ததாரர் -(0.11%) மதிப்பீட்டை விட அதிகம்<br>திரு பெரியசாமி ஒப்பந்ததாரர் -(0.01%) மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | <u>சிப்பம்2:</u>இராசிபுரம் நகராட்சி கோனேரிப்பட்டி எக்ஸ்.நெ.2 விஜயலட்சுமி நகரில் தார் சாலை அமைத்தல். | 13.00 | திரு பிரகாசம் ஒப்பந்ததாரர் -(0.62%) மதிப்பீட்டை விட அதிகம்<br>திரு பெரியசாமி ஒப்பந்ததாரர் -(0.09%) மதிப்பீட்டை விட குறைவு |

அலுவலகக்குறிப்பு:

1) குறைந்த ஒப்பந்தப்புள்ளியை வழங்கிய திரு பெரியசாமி, ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
2) மன்றம் பதிவு செய்யலாம்.

(747/25/இ1)

**தீர்மானம் எண். 750**

பதிவு செய்யப்பட்டது.

ஒம்/– முனைவர் இரா. கவிதா சங்கர்,
நகர் மன்றத் தலைவர்.

/ உண்மை நகல் /

ஆணையாளர்(மு.கூ.பொ.)
இராசிபுரம் நகராட்சி.